ஒழுக்கமுடைமை

- அறத்துப்பால்
- இல்லறவியல்
- குறள் எண் : 131-140
- ஒழுக்கமுடைமை

ஒழுக்கமுடைமை

- ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
  உயிரினும் ஓம்பப் படும்.

- ஒழுக்கமே எல்லார்க்கும் மேன்மையைத் தருவதாக இருப்பதால், அந்த ஒழுக்கமே உயிரை விடச் சிறந்ததாகப் போற்றப்படும்.

ஒழுக்கமுடைமை

132

- பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
  தேரினும் அஃதே துணை.

> ஒழுக்கத்தை வருந்தியும் போற்றிக் காக்க வேண்டும்; பலவற்றையும் ஆராய்ந்து போற்றித் தெளிந்தாலும், அந்த ஒழுக்கமே வாழ்க்கையில் துணையாக விளங்கும்

ஒழுக்கமுடைமை

133

- ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
  இழிந்த பிறப்பாய் விடும்.

➢ ஒழுக்கம் உடையவராக இருப்பதே உயர்ந்த குடிப்பிறப்பின் தன்மை; ஒழுக்கம் கெடுதல் இழிந்த பிறப்பின் தன்மையாகி விடும்

ஒழுக்கமுடைமை

134

- மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
  பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.

➢ கற்ற மறைப் பொருளை மறந்தாலும் மீண்டும் அதனை ஓதிக் கற்றுக் கொள்ள முடியும்; ஆனால் மறை ஓதுவனுடைய குடிப்பிறப்பு, ஒழுக்கம் குன்றினால் கெடும்.

ஒழுக்கமுடைமை

135

- அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன்று இல்லை
  ஒழுக்க மிலான்கண் உயர்வு.

➢ பொறாமை உடையவனிடத்திலே ஆக்கம் அமையாதது போல, ஒழுக்கம் இல்லாதவன் வாழ்க்கையிலும் உயர்வு இல்லை!

ஒழுக்கமுடைமை

136

- ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
  ஏதம் படுபாக் கறிந்து.

➢ ஒழுக்கம் தவறுதலால் குற்றம் உண்டாவதை அறிந்து, மனவலிமை உடைய சான்றோர் ஒழுக்கத்தில் தவறாமல் காத்துக் கொள்வர்.

ஒழுக்கமுடைமை

137

- ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி.

➢ ஒழுக்கத்தினால் உயர்வை அடைவர்; ஒழுக்கம் இல்லாதவர் வேண்டாத பழியை அடைவர்.

ஒழுக்கமுடைமை

138

- நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும்.

➢ நல்ல ஒழுக்கமானது இன்பமான நல்வாழ்வுக்கு வித்தாக இருக்கும்; தீய ஒழுக்கமோ எக்காலத்தும் துன்பத்தையே தரும்

ஒழுக்கமுடைமை

- ஒழுக்க முடையவர்க்கு ஒல்லாவே தீய
  வழுக்கியும் வாயாற் சொலல்.

> தீய சொற்களைத் தவறியும் தம் வாயினாற் சொல்லும் குற்றம், நல்ல ஒழுக்கம் உடையவர்களுக்கு ஒரு போதும் பொருந்தாத பண்பாகும்

ஒழுக்கமுடைமை

140

- உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
  கல்லார் அறிவிலா தார்.

➢ உலகத்தாரோடு பொருந்தி ஒழுகும் தன்மையை அறியாதவர், பல நூல்களைக் கற்றிருந்தாலும் அறிவில்லாதவரே ஆவர்